# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 34 of 2020

Deposition of witness for Prosecution PW11
Defence
Court

Name :நவீன்குமார்
Father Name : கனகராஜ்
Village :வாடிப்பட்டி
Taluk :சோழவந்தான்
Caste :
Calling :
Religion :
Age :22

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of April 2026

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை -**

1) நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் மண் சோதனை பரிசோதனை நிலையத்தில் தற்போது பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.9** ஆகும். மேற்படி கையெழுத்தை 07.05.2019 ம் தேதி நான் வேலை முடித்து ராஜ்குமார், ஆதவன், வினோத்குமார்ஆகியோர்கள் எங்கள் அறைக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது Hero Honda Splender Plus என்ற இருசக்கர வாகனத்தில் 4 நபர்கள் வந்தனர். எங்கள் 3 பேரையும் வழிமறித்து அடித்து, மிரட்டி பணம் கேட்டார்கள். என்னிடம் இருந்து ரூ.6,000/– பறித்தனர். எனது செல்போன், வினோத்குமார் செல்போன் மற்றும் ராஜ்குமார் செல்போன் ஆகியவற்றை பறித்து கொண்டனர். என்னிடம் காட்டப்படும் செல்போன் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் கத்தி சா.பொ.2 ன் மூலம் எதிரிகள் எங்களை மிரட்டினர்.

2) எதிரிகளை நாங்கள் மற்றும் எங்கள் வாட்ச்மேன் ஆகியோர்கள் மறித்து

பிடித்து எதிரிகளை சூலக்கரை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம். ஆஜர் எதிரிகள் நாங்கள் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்ற நபர்கள் இல்லை. வாட்ச்மேன் ஸ்ரீனிவாசன் சம்பவம் பற்றி புகார் கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சேர்த்தனர். என்னை கத்தியால் உச்சந்தலையில் அடித்தனர். வெளிநோயாளியாக நான் சிகிச்சை பெற்றேன். வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவ இடம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலிசார் உடனே வந்தனர். வாட்ச்மேன் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு வந்தார். போலிசார் வாட்ச்மேனை விசாரித்தனர். நடந்த விபரத்தை அங்கு வைத்து போலிசார் வாட்ச்மேனிடம் கேட்டனர். விடுதியில் வைத்து வாட்ச்மேனிடம் போலிசார் கையொப்பம் வாங்கினர்.